எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழக அதிகாரிகளை அவ்விடத்திற்குச் செல்லவிடாமல் தடுத்ததுடன், மாவட்ட ஆட்சியர் நேரில் வரவேண்டுமென வலியுறுத்தினர். மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் காவல் துறை அதிகாரிகள் எடுத்துக் கூறியும் கேளாமல், எரிவாயு குழாய்க் கிணறு ஒன்றின் அருகில் சாலையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த வைக்கோல் போர் உள்ளிட்ட பொருட்களுக்குத் தீ வைத்ததுடன், அவர்களுள் சிலர் காவல் துறையினர்மீது கற்களை வீசித் தாக்கினர்.

இத்தாக்குதலில், ஒரு காவல் ஆய்வாளர் மற்றும் இரு காவலர்கள் மற்றும் கதிராமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்ததுடன், காவல் துறைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றும் சேதமடைந்தது. காவல் துறையினர் கிராமத்தினரை அமைதியாகக் கலைந்துபோக அறிவுறுத்தியும், அவர்கள் அதனை பொருட்படுத்தாமல் தொடர்ந்து கற்களை வீசி வன்முறையில் ஈடுபட்டதால், குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து அவர்களைக் கலைந்துபோகச் செய்தனர். பின்னர், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தினர் எரிவாயு இணைப்பினைத் துண்டித்தனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, பத்து பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தற்போது, கதிராமங்கலம் கிராமத்தில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நிலைமை அமைதியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

காட்பாடி, தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனப் பணியாளர்களுக்கு சம்பள நிலுவைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நாளைக்குப் பார்க்கலாம்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

2017 ஜூலை 3]

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், நாளைக்குப் பார்க்கலாம். நான் நிகழ்ச்சி நிரலுக்குள் சென்றுவிட்டேன். (குறுக்கீடு) நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்பாடி, தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனப் பணியாளர்களுக்கு சம்பள நிலுவைத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் 1983 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடி தாலுகாவில் துவக்கப்பட்டது. இந்நிறுவனம் 1986 ஆம் வருடம் உற்பத்தியைத் தொடங்கி, நைட்ரோ கிளிசரினை மூலப்பொருளாகக் கொண்ட வெடிமருந்தை தயாரித்து நல்ல இலாபம் ஈட்டி வந்தது. நைட்ரோ கிளிசரின் வெடிமருந்து உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதை 2004 ஆம் ஆண்டு மத்திய அரசு தடை செய்ததால், இந்நிறுவனம் அந்த ஆண்டு முதல் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. இதனால், இந்நிறுவனத்தில் வெடிமருந்து உற்பத்தி செய்வதற்குத் தேவையான தொழிலாளர்களுக்கும் மேலாக அதிகமான தொழிலாளர்கள் தொடர்ந்து பணியில் இருந்து வந்தனர். ஆகையால், தொழிலாளர்களின் ஊதியச் செலவு அதிகமாகி, வெடிமருந்து சந்தையில் மற்ற உற்பத்தியாளர்களின் விற்பனை விலையுடன் போட்டியிட்டு விற்க இயலாமல் நட்டத்தில் இயங்கி

வந்தது. வேலைமூலதனம் (working capital) இல்லாத காரணத்தால், ஜூலை 2016 முதல் இந்நிறுவனம் உற்பத்தியை நிறுத்தி வைத்துள்ளது. ஊழியர்களுக்கு டிசம்பர் 2016 வரை சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசாணை (நிலை) எண் 21, தொழில் (எம்.ஐ.எப்.1) துறை, நாள் 9-3-2017-ல் வழிவகை கடனாக ரூபாய் ஐந்து கோடி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் அரசு இதுவரை இந்நிறுவனத்திற்கு ரூ.44.20 கோடி, வழிவகைக் கடன், விருப்ப ஓய்வு திட்டக் கடன் என்று வழங்கி இந்நிறுவனத்திற்கு உதவி செய்து வந்துள்ளது. இந்நிறுவனத்தை இலாபகரமாக இயக்க இயலாததால், இந்நிறுவன ஊழியர்களை மாற்றுப் பணி மற்றும் விருப்ப ஓய்வு திட்டத்தில் விடுவிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. பணியாளர்களுக்கு நிலுவையில் உள்ள சம்பளம் வழங்குவது தொடர்பாக கருத்துரு பரிசீலனையில் உள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்த பின், நிலுவையிலுள்ள சம்பளம் கூடிய விரைவில் பட்டுவாடா செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை என்று பெயர் இருந்தாலும், இது விவரம் இல்லாத அறிக்கையாக இருக்கிறது. காரணம், வெடிமருந்து நிறுவன பணியாளர்களுக்கு 6 மாதகாலமாக சம்பளம் வழங்கவில்லை. ஆகையினால், நிலுவையில் உள்ள சம்பளத் தொகையை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்றுதான் நான் கேட்டேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா கதைகளையும் சொல்லிவிட்டு, நிதி கிடைத்தால் சம்பளம் வழங்குவோம் என்று சொல்கிறார். தொழிற்சாலையில் தொழிலாளர்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 6 மாதகாலமாக சம்பளம் கொடுக்கவில்லையென்றால் எப்படி? அந்தத் தொழிற்சாலையை மூடுகிறீர்கள் என்று சொன்னால், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு Voluntary retirement கொடுக்கிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதையாவது கொடுத்து அவர்களை வேறு இடத்திற்கு அனுப்பலாம் அல்லவா? அப்படியும் அனுப்ப முடியவில்லை. மீதம் 276 பேர்தான் இருக்கின்றார்கள். அவர்களையாவது வேறு இடத்திற்கு

2017 ஜூலை 3] **[திரு. துரைமுருகன்]**

அனுப்பலாம் என்று சொன்னால், அதையும் உங்களால் செய்ய முடியவில்லை. இருக்கின்றவர்களை என்ன செய்ய முடியும்? தொழிலாளர்கள்தான் சம்பளம் வாங்கவில்லையே, Officers சம்பளம் வாங்காமல் இருக்கலாம் அல்லவா? M.D. சம்பளம் வாங்காமல் இருக்கிறாரா, மற்ற அதிகாரிகளெல்லாம் சம்பளம் வாங்காமல் இருக்கின்றார்களா? அந்தத் தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குகிறது என்று சொன்னால், தொழிலாளர்கள் மட்டும்தான் சம்பளம் வாங்காமல் இருக்க வேண்டும். ஆனால், அதிகாரிகள் மட்டும் சம்பளம் வாங்க வேண்டுமா? முதலில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்த தொழிற்சாலைதான். இதை சில அதிகாரிகளே சேர்ந்து கெடுத்துவிட்டார்கள். அந்தத் தொழிற்சாலையை நிருவகிக்க ஓர் அதிகாரியை நியமனம் செய்கிறார்கள். உப்புக்கும் அவர்தான் அதிகாரி, சிமெண்ட்டுக்கும் அவர்தான் அதிகாரி, TEL-க்கும் அவர்தான் அதிகாரி. இப்போது, நல்ல காலம், பாலுக்கும் அவரையே அதிகாரியாக நியமித்திருக்கிறார்கள். பாலோடு நிற்கவில்லை, மறுபடியும் அதே அதிகாரியைத்தான் TEL-க்கும் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரியை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்வது? எதையும் செய்ய முடியாது. Everybody's business is Nobody's business. ஒன்றுமில்லாமல் செய்துவிட்டார். ஆகையினால், இந்தத் தொழிற்சாலையை மூடவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்தது அதிகாரிகளே தவிர, தொழிலாளர்கள் அல்ல. அதுமட்டுமல்ல, Provident fund-ம் அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்கிறார்கள். பிடித்தம் செய்யும் அந்தப் பணத்தைக் கட்ட வேண்டும் அல்லவா? அதையும் இதுவரை கட்டவில்லை.

அதேமாதிரி, கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வாங்குகிறார்கள். அதற்குண்டான தொகையையும் அந்தத் தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்கின்றார்கள். அந்தத் தொகையையும் கொண்டுபோய் கட்டுவது கிடையாது. ஆக, இப்படிப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படியாவது சம்பள பாக்கித் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டே இரண்டு கேள்விகளை மட்டும் நான் கேட்கிறேன். நிருவாகத்தை உங்களால் நடத்த முடியவில்லையென்று சொன்னால், இருக்கின்ற தொழிலாளர்களில், Voluntary retirement-ல்

போகின்றவர்களுக்கு எல்லா benefit-ஐயும் கொடுத்து அனுப்ப வேண்டும் அல்லது வேறு ஒரு இலாகாவிற்கு absorb செய்யச் சொல்லுங்கள். அதனால் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஆனால், அந்தத் தொழிற்சாலையை மூடிவிடாதீர்கள். அதுவொரு நல்ல தொழிற்சாலை.

இன்னொன்று, நைட்ரோ கிளிசரின் என்ற மூலப்பொருள் கிடைக்காததால்தான் இந்தத் தொழிற்சாலையை நடத்த முடியவில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால், private நிறுவனங்களெல்லாம் நன்றாக நடத்தி, இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலையும் நல்ல இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்ததுதான். ஒருகாலத்தில் 40 கோடி ரூபாய் அளவிற்கு இலாபத்தை ஈட்டித் தந்த தொழிற்சாலைதான். தனியாரெல்லாம் இலாபம் சம்பாதிக்கின்றார்கள். ஆனால், நம்மால் இலாபம் சம்பாதிக்க முடியவில்லையென்றால் அதற்கு என்ன அர்த்தம்? இங்குள்ள தொழிலாளர்கள் அனைவரும் நன்றாக உழைத்தார்கள், இருக்கின்ற அதிகாரிகள்தான் மோசம் செய்துவிட்டார்கள் என்று நான் public-ஆகச் சொல்கிறேன். வேறு department-ஐப்பற்றியெல்லாம் பேச ஆரம்பிக்கலாம், ஆனால், அது எனக்கு வேண்டாம் என்று நினைக்கிறேன். எந்தெந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள், எப்போதெல்லாம் இலாபம் வந்தது என்பதைப்பற்றியெல்லாம் சொல்ல நான் விரும்பவில்லை. ஆகையால், அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பள நிலுவைத் தொகையை எப்போது கொடுப்பீர்கள் என்று நான் நேரடியாகக் கேட்கிறேன். Voluntary retirement-ல் செல்வதற்கு 276 பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, TEL நிறுவனத்தைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்கு தெரியும். காரணம் என்னவென்று சொன்னால், அவர் அந்தச் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டவர். முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

முதலமைச்சராக இருந்தபோது, 1983-ல் அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட அந்தத் தொழிற்சாலை 18 ஆண்டு காலம் நல்ல இலாபத்தில் இயங்கியது. 1986-ல் வணிக ரீதியாக உற்பத்தி செய்து, பொருட்களை விற்பனை செய்தார்கள். அந்த நிறுவனம் 1986-லிருந்து 2004 வரை நல்ல இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதனுடைய அனைத்து விவரங்களும் அவர்களுக்குத் தெரியும். Nitroglycerin-க்கு தடை உத்தரவு வந்தது. தடை உத்தரவு ஏன் வந்தது என்றும் அவர்களுக்குத் தெரியும். ஆந்திரப்பிரதேச முதல்வர் அவர்கள் திருப்பதிக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதன்பிறகு, NG-நைட்ரோ கிளிசரின் வெடிபொருள் தயாரிப்பதற்கும், வணிக ரீதியாக விற்பனைக்கும், உற்பத்திக்கும் தடை வந்தது. அதனால், நஷ்டத்தில் சென்றுவிட்டது. அதன்பிறகு emulsion, slurry என்ற இரண்டு வெடிபொருட்களை தயார் செய்தோம். அதிலே, excess labour, surplus labour இருந்தார்கள். அதனால் வணிக ரீதியாக போட்டி போட முடியவில்லை. வணிக ரீதியாக விற்பனைக்கும் கொண்டுபோக முடியவில்லை. போட்டி, போட்டி என்று அதிலே விலைவீழ்ச்சி ஏற்பட்டது. அந்தக் காரணத்தால், தொடர்ந்து 12 ஆண்டுக் காலமாக நஷ்டத்திலே அந்தத் தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-35

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்த காலத்தையும் சேர்த்து கிட்டத்தட்ட 44 கோடி ரூபாயை அரசிடம் வழிவகைக் கடனாக வாங்கி, பல்வேறு காலக்கட்டத்தில் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து செலுத்தியிருக்கிறோம். 281 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். 196 பணியாளர்கள் தன் விருப்ப ஓய்வு, VRS கோரி மனு கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களுக்கு பணியிட மாற்றம் செய்திருக்கிறோம். 33 பேரை Tamil Nadu News print and Papers Limited-க்கு பணியிட மாற்றம் செய்திருக்கிறோம். 10 பேரை TANCEM-க்கு பணியிட மாற்றம் செய்திருக்கிறோம். 70 பேருக்கு பணியிட மாற்றத்திற்கான உத்தரவு வழங்கியும், அந்தப் பணியிடங்களில் போய் அவர்கள் சேரவில்லை. அவர்களுக்கு உத்தரவு வழங்கியும் போய் join பண்ணவில்லை. மீதியிருக்கும் பணியாளர்களுக்கும் அரசின் சார்பாக உடனடியாக பணி மாற்றத்திற்குண்டான உத்தரவு வழங்கி பல்வேறு பொதுத்துறை

நிறுவனங்களுக்கு மாற்றியமையப்பதற்குண்டான வழிவகைகளை அரசு செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 5 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. அரசிடம் வழிவகைக் கடன் 5 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். இரண்டரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். உடனடியாக பணியாளர்களுக்கான சம்பள பாக்கியைக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் gate meeting தொடர்ந்து போட்டு, அரசின்மீது கடும் சொற்கள் எல்லாம் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். TEL நிறுவனம் அறிவார்ந்த ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொன்னாலும், அதனை ஏற்று நடத்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் அறிவிப்பு கொடுக்கவேயில்லை. திடீரென்று வாய்ப்பு கேட்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த நிகழ்ச்சிக்குப் போய், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு கேள்வியும் கேட்டு முடித்துவிட்டார். இப்பொழுது இரண்டாவது கேள்வி கேட்க அனுமதித்திருக்கிறேன். நீங்கள் திடீரென்று வாய்ப்பு கேட்டால் எப்படி? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கேள்விகளை எல்லாம் நான் இப்பொழுது கேட்க விரும்பவில்லை sir. இப்பொழுது அங்கு பணிபுரிகிற 271 பேருக்கும் சம்பளம் கொடுத்தால் போதுமானது. அதாவது settlement பண்ணவேண்டும். Gratuity கொடுக்க வேண்டும். இதையெல்லாம் சேர்த்துக் கொடுக்கச் சொல்லுங்கள், போதும், அவ்வளவுதான் நான் கேட்பது. தொழிற்சாலையை விட்டு வெளியே அனுப்புவதாக முடிவு செய்துவிட்டால் அனுப்பிவிடுங்கள். எங்கேயாவது deputation இல் போடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், இரண்டு settlement போடவேண்டும். Settlement கொடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்கிறேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்தில் பணிபுரிந்தவர்களில் 196 பேர் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்காக விருப்ப மனு கொடுத்திருக்கிறார்கள். பலரைப் பணியிட மாற்றம் செய்திருக்கிறோம். மேலும், தமிழ்நாடு அரசில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்திற்கு உடனடியாக 2.5 கோடி ரூபாய் வழங்குவதற்கு ready ஆக இருக்கிறோம். விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் settle பண்ணுவது குறித்து அரசின் கவனத்தில் இருக்கிறது. 36, 40 கோடி ரூபாய்க்கும் மேல் தேவைப்படுகிறது. நிதித் துறையிடமிருந்து நிதி கேட்டிருக்கிறோம். அதுவும் அரசின் கவனத்தில் இருக்கிறது. அந்த நிதியையும் வாங்கித் தருவதற்குரிய நடவடிக்கையையும் மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு துறைகளுக்கு பணியிட மாற்றத்திற்கு பணியாளர்களோ, தொழிலாளர்களோ யார் வந்து கேட்டாலும் உடனடியாக பணி உத்தரவு வழங்கி, அங்கு போய் சேர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்கள் TNPL நிறுவனத்திற்குத்தான் போக விரும்புகிறார்கள். TNPL நிறுவனத்தில் அவ்வளவு vacancy இல்லை. TANCEM நிறுவனத்திற்கு 10 பேர்தான் போயிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், TANMAG இலும் கேட்டிருக்கிறோம். TANSALT இல் கூட கேட்டிருக்கிறோம். பல்வேறு இடங்களுக்கு பணியிட மாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறோம். TEL நிறுவனத்தை அழைத்துப் பேசி உடனடியாக ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தயிருக்கிறோம். அதன் விவர அறிக்கையைக்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்து மாத சம்பளப் பாக்கியைக் கொடுப்பதற்கு 5 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். 2.5 கோடி ரூபாய் வந்திருக்கிறது. அதையும் கொடுப்பதற்கான நடவடிக்கை, வெகு விரைவாக, within a week இல் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கேள்விகள் முடிந்துவிட்டன. (குறுக்கீடு) நீங்கள் என்ன சொல்லவேண்டும், சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று வாரங்களுக்குள்ளாக அவர்களுக்குரிய சம்பளத்தை கொடுத்துவிடுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் உறுதியளித்துள்ளார்கள். அந்த உறுதிப்படி நடந்துகொண்டால், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தப் பிரச்சினை குறித்த விவரம் நன்கு தெரியும். எதனால் அந்தத் தொழிற்சாலை நின்றது, எதனால் நஷ்டம் வந்தது, என்ன நிலைமை இருந்துகொண்டிருக்கிறது என்பதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து அதாவது, 2006 முதல் 2011 வரையிலும் loss. அதன்பிறகும் loss. 12 ஆண்டு காலத்திற்கும் மேலாக தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகிறது. வெளிச் சந்தையில் எங்களால் போட்டிபோட முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் gate meeting எல்லாம் போட்டு அரசின்மீது கடுமையாகப் பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தொழிற்சாலை குறித்த விவரம் தெரிந்தும் இவ்வாறு சொல்கிறார் என்பதை நான் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டரை கோடி ரூபாய் வழிவகைக் கடன் அரசிடம் கேட்டிருக்கிறோம். அந்த நிதி வந்தவுடன் நிச்சயமாக, வெகுவிரைவில், ஊழியர்களின் சம்பளம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முஹம்மது அபூபக்கர், நான் அஜெண்டாவில் உள்ள அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போய் நிறைய நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் திடீரென்று இப்படி எழுந்து நின்று raise செய்யமுடியாது. (குறுக்கீடு) நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த agenda-விற்குப் போய் நிறைய நேரம் ஆகிவிட்டது. திடீரென்று இப்படி எழுந்து நின்று பேச வாய்ப்பு கேட்டால் எப்படி? நாளை பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நாளை பார்க்கலாம்,

உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை அவையில் படிக்கவேண்டும் என்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) சரி, அது உங்கள் விருப்பம். (குறுக்கீடு) சரி, அது உங்கள் விருப்பம்.

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளியேறினார்.)

முற்பகல் 11-40

5. விதி 110-ன்கீழ் அறிக்கை

ஊரகச் சாலைகள் மற்றும் உயர்மட்டப் பாலங்கள் மேம்படுத்துதல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டமைப்பு வசதிகள் செய்தல், தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ஊராட்சிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல், மாநகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அடையாறு ஆற்றில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் உயிர் நாடியாக விளங்குவது கிராமங்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. ஊராட்சிகளில் வாழும் மக்கள் நலன் கருதி நகரங்களில் கிடைக்கப்பெறும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கிராமங்களிலும் ஏற்படுத்துதல், ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல், வீட்டு வசதியினை அளித்தல், தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்